விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 19 செவ்வாய்க்கிழமை (05.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 290

கைகளைக் காண்பித்து

## பருத்தித்துறை நீதிபதியை அவமதித்த மூவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பயணித்த காருக்கு கைகளைக் காண்பித்து நீதிபதியை அவமதித்தனர் என்ற குற்றச்சாட்டில் நேற்று திங்கட்கிழமை மாலை மூவர் நெல்லியடிப் பொலிஸாரினால் 15

## துன்னாலையில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(கரணவாய்)

வடமராட்சி துன்னாலை பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் படுகாயமடைந்த மூவரில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதில் துன்னாலை தெற்கைச் சேர்ந்த செல்வரத்தினம் சிந்துஷன் (வயது-24) 15

13ஆவது திருத்தத்தை செயற்படுத்தி

# அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவளிக்க வேண்டும்

இந்திய வெளியுறவுச் செயலாளரிடம் கூட்டமைப்பு

(கொழும்பு) 13ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்தி அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும் என இந்திய வெளியுறவுச் செயலாளரிடம் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)



ஜனநாயக முறையில் பிரச்சினைகளுக்கு தீர்வு

# பயங்கரவாத சட்டத்தை திருத்த நடவடிக்கை

ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனநாயக முறையில் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்றார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## கொரோனாவால் ஆசிரியர் மரணம்



(முல்லைத்தீவு)

கொரோனாத் தொற்றுக் காரணமாக ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவில் உள்ள பாடசாலையில் கல்வி கற்பித்த துஷ்யந்தன் என்பவரே மரணமான 15


## 15 - 19 வயதினருக்கு அடுத்த வாரம் தடுப்பூசி

(கொழும்பு)

15 முதல் 19 வயது வரையிலானவர்களுக்கு எதிர்வரும் வாரம் தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

உரிய அதிகாரிகளின் வழிகாட்டல்களுடன் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். 15

## பேர்த்தியுடன் ஜனாதிபதி



தன்னுடைய பேர்த்தியை முதல்முறையாக அமெரிக்காவில் பார்வையிட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அது தொடர்பிலான புகைப்படத்தையும் முகநூலில் பதிவிட்டுள்ளார்.

## தமிழ்த் தரப்புக்கள் அதிகாரப் பகிர்வை ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும்

தமிழர்களின் கோரிக்கை அழுத்தமாக இல்லை என்பதே இந்தியாவின் நிலைப்பாடு - ஹர்ஷ வர்தன்

(கொழும்பு)

"13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் அதிகாரப் பரவலாக்கல் இடம்பெற வேண்டுமென்ற நிலைப்பாட்டிலிருந்து இந்தியா பின்வாங்கவில்லை.

எனினும், 13ஆவது திருத்தத்தின் அடிப் 15

## நாட்டில் மேலும் 43 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாவுக்கு மேலும் 43 பேர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 15

## அரசுக்கு எதிராக ஓரணியில் திரளுங்கள்

எதிர்க்கட்சி தலைவர் அழைப்பு

(கொழும்பு)

"இலங்கையின் வளங்களைத் தாரைவார்க்கும் அரசுக்கு எதிராக மக்கள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்"

இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் எதிர்க் 15

# நன்றி நவில்கின்றோம்



## வண. S. யோசுவா சிவயோகன்

(சிரேஷ்ட போதகர் - இல. நாற்சதுர சுவிஷேச சபை, நல்லூர்,
ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை)

கடந்த 05.09.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த
எமது குடும்பத் தலைவரின் செய்திகேட்டு எமது குடும்பத்தை
நேரிலும் தொலைபேசி மூலமாகவும் மற்றும் பல வழிகளிலும் ஆற்றித்தேற்றிய
போதகர்கள், உறவுகள், திருச்சபை விசுவாசிகள்,
நண்பர்கள் மற்றும் விசேடமாக சகலவிதத்திலும் உதவிசெய்த வைத்தியசாலை
நிர்வாகத்தினர், உத்தியோகத்தர்கள்
மற்றும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்
எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

021 222 6730
077 845 4862

குடும்பத்தினர்

(8135)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 01.12.1928 — மறைவு 06.09.2021

அமரர்

## பாக்கியம் பூபாலசிங்கம்

சிவக்கொழுந்து

அன்னாரின் 31ஆம் நினைவு நாள் இன்று (05.10.2021)
செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்
என்பதுடன் அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு
நேரிலும் தொலைபேசி, சமூகவலைத்தளங்கள்
மூலமாகவும் ஆறுதல் கூறிய அனைவருக்கும்
எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"உபயகதிர்காமம்"
புலோலி தெற்கு, பருத்தித்துறை.

(C-2756)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி சாந்தகுணம் குலவீரசிங்கம்

**பிறப்பு : 13.07.1956 இறப்பு : 02.10.2021**

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் துன்னாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தகுணம் குலவீரசிங்கம் கடந்த 02.10.2021 (சனிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கன் - சிலோன்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குலம் - அழகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் குலவீரசிங்கத்தின் அன்பு மனைவியும் மன்னன், செல்வம், சிவா ஆகியோரின் அன்புச் சகோதரியும் றோகன் (டென்மார்க்), றீகன், றோஜினி (இத்தாலி), சாளினி, றஜீகன், வஜீகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிந்துஜா, கௌசலா, சுவீந்திரகுமார் (இத்தாலி), சுயேந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நித்தீஸ், யர்ஸ்மிரா, றயன், றயா (இத்தாலி), அகல்விழி, வர்ஜினி, திலக்ஷன், திலக்ஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜெயவீரசிங்கம், குணரட்ணசிங்கம், தங்கராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.10.2021) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேலுண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(8134)

துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்



# கொவிட் தடுப்பூசி முற்பதிவிற்கு தொலைபேசி இலக்கம் அறிமுகம்



(யாழ்ப்பாணம்)

கொவிட் 19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் விசேட தேவை மற்றும் நாட்பட்ட நோய்கள்உள்ள 12 தொடக்கம் 19 வயதினருக்கான பைஸர் தடுப்பூசியானது யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி முதல் வழங்கப்பட்டுவருகிறது.

எனவே பெற்றோர் பின்வரும் தொலைபேசி இலக்கங்களான யாழ். போதனா வைத்தியசாலை-0770741385, பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை- 0761 275210 ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலை -077 2073098, தெல்லிப் பளை ஆதார வைத்திய சாலை-0771340519, சாவ கச்சேரி ஆதாரவைத்திய சாலை-0702900000, ஆகியவற்று டன் தொடர்பு கொண்டு முற் பதிவுகளை மேற் கொண்டு குறிப்பிடப்படும் தினத்தில் தடுப்பூசியை தவறாது பெற்றுக் கொள்ளவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (4-5-33)



இந்திய வெளிவிவகார செயலாளர் ஹர்ஷ் வர்தன் மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு இடையில் நேற்று அலரிமாளிகையில் சந்திப்பு இடம்பெற்றது.குறித்த சந்திப்பில் இந்தியா-இலங்கை உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

# கறுப்புப்பணம் பதுக்கி வைத்திருந்தவர்கள் பட்டியலில் முன்னாள் அமைச்சரின் பெயர்

(கொழும்பு)

உலகளவில் முறைகேடாக வெளிநாட்டில் கறுப்பு பணத்தை பதுக்கி வைத்தவர்கள் பெயர் அடங்கிய ஆவணங்கள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதில் இலங்கையின் முன்னாள் அமைச்சரான நிருபமா ராஜபக்ஷவின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

'பன்டோரா பேப்பர்ஸ்' என்ற பெயரில் வெளியான சர்வதேச புலனாய்வுப் பத்திரிக்கையாளர் கூட்டமைப்பில் உருவான இந்த ஆவணத்தில் 90 இற்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் உள்ளிட்ட முக்கிய நபர்களின் இரகசிய உடைமைகள் குறித்த தகவல் வெளியிட்டப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் 2010 முதல் 2015 வரை நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பின் பிரதி அமைச்சராக பணியாற்றிய நிருபமா ராஜபக்ஷ, ஜனாதிபதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினராவார்.

அவரது கணவர் 2016 ஆம் ஆண்டில், ஜனாதிபதியின் குடும்பத்தின் மற்றொரு உறுப்பினர் பசில் ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட ஒரு ரியல் எஸ்டேட் ஒப்பந்தம் தொடர்பாக அவர் மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

நிருபமா ராஜபக்ஷ மற்றும் அவரது கணவர் இருவரும் இணைந்து லண்டன் மற்றும் சிட்னியில் சொகுசு குடியிருப்புகளை வாங்குவதற்கும், முதலீடு செய்வதற்கும் ஷெல் நிறுவனத்தை பயன்படுத்தியதாக அந்த அறிக்கை விரிவாக கூறுகிறது.

மேலும் நிருபமாவின் கணவரின் நீண்டகால ஆலோசகர், 2011 ஆம் ஆண்டு நிலவரப்படி, அவரது ஒட்டுமொத்த சொத்தாக 160 மில்லியன் டொலருக்கும் அதிகமாக வைத்திருந்தார் என இரகசிய மின்னஞ்சல்களை மேற்கோளிட்டு தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இருப்பினும் குறித்த இரகசிய ஆவணங்கள் குறித்து நிருபமா ராஜபக்சே மற்றும் அவரின் கணவர் ஆகியோர் பதிலளிக்க மறுத்து விட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5)

## நாட்டின் சொத்துக்களை விற்பதற்கு எதிராக
# எதிர்க்கட்சி போராட்டம்

நாட்டில் அமெரிக்க டொலரின் கையிருப்பு இல்லாததானால் எமது நாட்டின் சொத்துக்களை வெளிநாடுகளுக்கும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமையை கண்டித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழுவினர் நேற்று திங்கட்கிழமை காலை கொழும்பு - தெமட்டகொடையிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனத்தின் முன்றலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹமான், சரத் பொன்சேகா, காவிந்த ஜயவர்ன உள்ளிட்டவர்களும் கட்சி ஆதரவாளர்களும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (4-5)




# கண்ணீர் அஞ்சலி



யாழ். அச்சுவேலி வளலாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்
முல்லைத்தீவு விசுவமடுவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## கணபதிப்பிள்ளை சுகுணராஜா

மண்ணில் : 1962.05.30 விண்ணில் : 2021.09.29

அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உரிமையாளர்
சண் கிறேசர் - அச்சுவேலி

(8130)

# கண்ணீர் அஞ்சலி



யாழ். அச்சுவேலி வளலாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்
முல்லைத்தீவு விசுவமடுவை தற்காலிக
வசிப்பிடமாகவும் கொண்ட

## கணபதிப்பிள்ளை சுகுணராஜா

அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து
துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மண்ணில் : 30.05.1962

விண்ணில் : 29.09.2021

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

மருமகள்
நிலானி கர்ஷன் (லண்டன்)

(8133)

# இராசிபலன்

05.10.2021,
புரட்டாதி 19, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 7.03 மணிவரை
உத்தரம் பின்னிரவு 2.10 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சந்திராஷ்டமம்: சதயம்
போதாயன அமாவாசை

வளவன்


மேஷம்

மற்றவர்களின் மனநிலையை அறிந்து கொண்டு செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள்.


ரிஷபம்

பிள்ளைகளின் தேவை அறிந்து பூர்த்தி செய்வீர்கள், மனமகிழ்ச்சியுடன் செயற்படுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கி கொள்ள முற்படுவீர்கள்.


மிதுனம்

தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


கடகம்

குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.


சிம்மம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


கன்னி

புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உடல் நலனில் அக்கறைக் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


துலாம்

நடப்பது எல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள், பணப் புழக்கம் அதிகமானாலும் அடுத்த அடுத்த செலவுகளால் திணறுவீர்கள், சயன சுக குறைவான நாள்.


விருச்சிகம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


தனுசு

குடும்ப ஒற்றுமை கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கூடும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.


மகரம்

குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனை தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.


கும்பம்

மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், நிதானத்தோடு நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், புதிய பொறுப்புகளை யோசித்து ஏற்பது நல்லது, பிரயாண பயமுண்டு.


மீனம்

உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், சுப காரிய செயற்பாடுகள் நல்ல முடிவுக்கு வரலாம், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

சோகம் என்பது மகிழ்ச்சி என்ற நீருக்காக உனக்குள் சுரக்கும் தாகம்

# இலங்கை வரும் உலகின் மிகப்பெரிய அசையும் சொத்து

(கொழும்பு)

உலகின் மிகப்பெரிய அசையும் சொத்தான Ever Ace கொள்கலன் கப்பல் இன்று 05 ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும்.

400 மீற்றர் நீளமும் 62 மீற்றர் அகலமும் உள்ள இந்த மிதக்கும் தீவு 23,992 கொள்கலன்களை சுமந்துகொண்டு வருகின்றது.

நெதர்லாந்து ரொட்டர்டாம் துறைமுகத்திலிருந்து சுயெஸ் கால்வாயூடாக வந்து கொழும்புத் துறைமுகத்தை அடையும்.




உலகின் 24 துறைமுகங்கள் மட்டுமே இந்தக் கப்பலை கையாள முடியும். அதில் தெற்காசிய வலயத்தில் கொழும்பு துறை முகத்தில் மட்டுமே இந்தளவு பிரமாண்டமான கப்பலை அனுமதிக்கும் ஆழமும் கொள்ளளவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5)

## கரைச்சி பிரதேச சபையின் சந்தை மேற்பார்வையாளர் சேவைக்கு உள்வாரியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல்-2021 திருத்தம்

2021.08.11 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பந்திகள் 3.4 மற்றும் 7.3 பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது.

3.4. 03/ 2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக **PL-1-2016** சம்பள குறியீட்டில் சம்பளத்தை பெறுபவராக இருத்தல் வேண்டும்.

7.3. விண்ணப்பிக்கவேண்டிய இறுதித்திகதி 2021.10.12 ஆக நீடிக்கப்ப டுகின்றது.

**ப.திலீபன்,**
**செயலாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-2749)

## கேள்வி அறிவித்தல் - நல்லூர் பிரதேச சபை
### சுகாதார, பாதுகாப்பு சேவைக்கான விலை மனுக் கோரல்-2021, 2022

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் நல்லூர் பிரதேசசபையில் 2021,2022 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு , சுகாதார சேவைக்கு தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன

| பெறுகை இலக்கம் | சேவை | எதிர்பாக்கப்படும் / சேவையான ஆளணி விபரம் |
|---|---|---|
| NP/14/41(10)/02/02/O.S/01 | சுகாதார சேவை | 10 |
| NP/14/41(10)/02/02/O.S/02 | பாதுகாப்பு சேவை | 5 |

02. சேவை வழங்குநர்கள், பாதுகாப்பு, சுகாதார சேவையை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச் சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

03. சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள சேவை வழங்குநர்கள் 'தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்' எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700 ,021-3142841) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. ஆர்வமுள்ள சேவை வழங்குநர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை, 14 /5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2021.10.06 ஆம் திகதியிலிருந்து 2021.10.28 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 15.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2500.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு 2021.10.29 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கேள்வி பத்திரத்துடன் இணைக்கப்பட்ட படிவத்திற்கு அமைவாக அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேசசபை,**
**கொக்குவில்.**

C-2751

# ஆன்மீகப் பிரசாரகர்களுக்கான புதிய கற்கை நெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவகத்தின், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பயிற்சி நிலையம் ஊடாக, நாடளாவிய ரீதியில், இணைய வழியில் **Zoom** மூலமாக, ஆன்மிகப் பிரசாரகர்களுக்கான அடிப்படைச் சான்றிதழ் கற்கைநெறி - 2021/ 2022 இற்கான புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் உமா மகேஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற முடியும் எனவும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் கற்கைநெறி தொடர்பான பதிவுகளுக்கு, 071 440 2318, 076 203 8128 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், வடமாகாணப் பிராந்திய அலுவலகம். இல. 695, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் அலுவலக முகவரிக்கோ தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவித்தார். (7-5)

# தடுப்புக்காவலில் இளைஞன் மரணம்

# மனித உரிமை ஆணைக்குழுவினால் விசாரணைகள் ஆரம்பம்


(யாழ்ப்பாணம்)

மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு நபர்களில் சம்சுதீன் மொகமட் றம் சான் எனும் நபர் சுகவீனமுற்று மன்னார் வைத்தியசாலையில் அனுமதித்த வேளை உயிரிழந்ததாக வெளியான செய்திகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணை அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வட பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், கடந்த வெள்ளிக்கிழமை அன்று இரு நபர்கள் கைது செய்யப்பட்டனர். கைதுடன் தொடர்புடைய விடயங்களை மன்னார் பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் பிரேத பரிசோதனை அறிக்கை பெறுவதற்கான வேண்டுகோள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட மற்றொரு நபரிடமிருந்து வாக்குமூலம் பெறுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

குறித்த முறைப்பாடு 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 14 இன் பிரகாரம் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையாக பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (7-5-33)



யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார செயலாளர் ஸ்ரீஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா உள்ளூர் அரசியல் பிரமுகர்களுடன் சந்திப்பில் ஈடுபட்டுள்ளார். இச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன், யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் உட்பட பல அரசியல் பிரமுகர்கள் மற்றும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்: சிவசாந்தன்)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ இ.பிரதீபசர்மா, பிரம்மஸ்ரீ சா. கோபாலசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (7-5)

# பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் , வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊரெழு பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்த போது, மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருவர் தலைக்கவசமின்றி ஆபத்தான முறையில் பயணித்துள்ளனர்.

அவர்களை வழிமறித்து சாரதி அனுமதிப்பத்திரத்தை வாங்கி தண்டனைப் பத்திரம் எழுத முற்பட்ட போது அங்கு வந்த பிரதேச சபை உறுப்பினர் பொலிஸாருடன் முரண்பட்டார்.

அவரது நடவடிக்கை எல்லை மீறிச் சென்றதனால் பொலிஸ் உத்தியோகத்தர் வானத்தை நோக்கி இரண்டு தடவைகள் சூடு நடத்தி எச்சரித்தார்.

அதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது. இந்நிலையில் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட மூவரையும் தமது கடமைக்கு இடையூறு விளைவித்தனர் எனும் குற்றச்சாட்டில் பொலிஸார் கைது செய்துள்ளனர். (7-5-18-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 140 | 130 | 150 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 150 | 160 |
| தக்காளி | 60 | 70 | 50 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 60 | 40 |
| கோவா | 150 | 140 | 150 | 200 |
| கரட் | 100 | 150 | 180 | 200 |
| பூசணி | 120 | 70 | 60 | 60 |
| புடோல் | 100 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 220 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 140 | 160 |
| பாகற்காய் | 250 | 450 | 320 | 480 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 60 | 180 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 250 | 220 | 220 | 240 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 240 |
| பீற்றூட் | 60 | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 150 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 260 | 180 | 240 |
| போஞ்சி | 180 | 200 | 260 | 280 |
| கத்தரிதம்புள்ள | 120 | 120 | 80 | 180 |
| கீரை – 1 பிடி | 30 | 60 | 30 | 70 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 65 | 50-70 |
| இராசவள்ளி | 250 | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | 300 | 200 | 220 | 280 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | -- | 50 | -- |



யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவுகின்ற குருதித் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் முகமாக 55 ஆவது காலாட்படைப்பிரிவு மற்றும் 552 ஆவது காலாட்படைப் பிரிவுகளின் அதிகாரிகள் உட்பட இராணுவ வீரர்கள் 150 பேரினால் யாழ். போதனா வைத்தியசாலையின் ஒத்துழைப்புடன் குருதி வழங்கும் செயற்பாடானது இயக்கச்சி பிரதேசத்தில் அமைந்துள்ள 552 ஆவது காலாட்படைப் பிரிவுத் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்றது.

# நிதி ஒதுக்கீடு

(குருமன்காடு)

கிராமிய அபிவிருத்திக்காக வெற்றி பெற்ற வட்டார உறுப்பினருக்கு 4 மில்லியன் ரூபாயும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களுக்கு 20 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது என மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ் தான் தெரிவித்துள்ளார். வவுனியாவில் இடம்பெற்ற பொது ஜன பெரமுன கட்சி உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (7-5-6-250)

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

# 2022 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை **01.01.2022ம் திகதி தொடக்கம் 31.12.2022ம் திகதி வரை** குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | : 06.10.2021 - 26.10.2021 செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணி வரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி | : 27.10.2021 புதன்கிழமை மு.ப 10.00 மணி வரை |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி | : 27.10.2021 புதன் கிழமை மு.ப 11.00மணிக்கு |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் | : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை. |

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5,கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
2. மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி கேள்விப்பத்திரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
4. கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த, தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின், ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500,000.00 இற்கும் ரூபா 200,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
6. மரக்கறிச் சந்தைக்கான கேள்வியில் சித்தியடையும் கேள்விக்காரர் உள்ளூராட்சி ஆணையாளரின் 03/2015 இலக்கமும் 09.11.2015 திகதியும் உடைய சுற்றுநிருபத்திற்கு அமைவாக இணங்குதல் வேண்டும்.
7. மரக்கறிச் சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% ற்கு மேல் வரி அறவிடக்கூடாது.
8. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொக்குவில் கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும். இறைச்சிக்காக மறி ஆடுகள், பசு மற்றும் கன்றுகள் அறுக்கப்படுவது அனுமதிக்கப்படமாட்டாது. இறைச்சிக்காக கொள்வனவு செய்யப்படும் கால்நடைகளுக்கு அப்பகுதி கால்நடை வைத்திய அதிகாரியின் நோய்த்தொற்று இல்லை என்ற சுகாதாரச் சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும். மேலும் சுகாதார வைத்திய அதிகாரியினால் கால்நடைகளுக்கான நோய்த்தாக்கம் தொடர்பாக பிரகடனப்படுத்தப்படும் பொழுது கொல்கள செயற்பாடுகள் நிறுத்தப்படும். அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
9. இறைச்சிக் கடைகளுக்கான கேள்வியில் சித்திபெறும் கேள்விதாரர் சுகாதார வைத்திய அதிகாரியால் அறிவிக்கப்படும் சுகாதார மேம்பாட்டு விடயங்களைக் கருத்திற்கொள்ளத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தத்தினை இரத்துச் செய்வதற்கு தவிசாளருக்கு அதிகாரம் உண்டு.
10. அரசாங்கத்தினால் மாடு இறைச்சிக்காக வெட்டுவது தடை செய்யப்படும் பட்சத்தில் சபையினால் கேள்விதாரருடன் செய்யப்பட்ட குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்படும்.
11. திருநெல்வேலிச் சந்தையில் விசேட பண்டிகை நாட்களில் நடைபாதை மற்றும் வீதியோர வியாபார நடவடிக்கைகள் அனுமதிக்கப்படமாட்டாது என்பதுடன், சபையினால் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வரி அறவிட அனுமதிக்கப்படும்.
12. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் சபை நிதிக்கு மாற்றப்பட்டு கேள்விகாரரின் பெயர் "தவறுனர்" பட்டியலில் சேர்க்கப்படும்.
14. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
15. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 2021.11.05ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**2022ம் ஆண்டுக்கு சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 29,326,044.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 802,230.00 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 500.00 | 5,000.00 | 122,113.20 |
| 4 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 500.00 | 5,000.00 | 154,398.75 |
| | **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1 | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 10,000.00 | 1,343,650.55 |
| 2 | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 513,810.00 |
| 3 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 448,740.60 |
| 4 | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 703,010.00 |
| 5 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 01 | 500.00 | 5,000.00 | 142,200.00 |
| 6 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 500.00 | 5,000.00 | 142,200.00 |
| 7 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 1,875,100.00 |
| 8 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 886,600.00 |

**திரு.ப.மயூரன்**
**தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்**
**2021.10.05**

(C-2750)

# ஒடுக்கப்பட்ட மக்களின் அடையாளத்தினை சீன ஆட்சி அழித்து வருகின்றது

## சீனாவிற்கு எதிராக லண்டனில் போராட்டம்

**(லண்டன்)**

**திபெத்திய ஹொங்கொங் சமூகத்தினர் மற்றும் உய்குர்கள் இணைந்து சீன மக்கள் கட்சிக்கு எதிராக லண்டனில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



கம்யூனிஸ்ட் ஆட்சியை போர்வையாகக் கொண்டு சாதாரண மக்களுக்கு எதிராக கடுமையாக துன்பங்களை ஏற்படுத்துவதாகவும் சர்வாதிகார அடக்குமுறைக்குள் சிறைப்படுத்துவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டனர்.

மொழிகள், கலாசாரங்கள் மற்றும் இந்த ஒடுக்கப்பட்ட மக்களின் அடையாளம் என்பவற்றையும் சீனா அழித்து வருவதாக குற்றம் சுமத்தினர்.

சீன ஆட்சியின் இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறை கொள்கையால் பாதிக்கப்பட்ட திபெத்திய மற்றும் உய்கூர் மக்களுக்கு பெரும் அநீதி ஏற்பட்டுள்ளது. கொல்டன் வீக் என்று அழைக்கப்படும் சீன வாரத்தில் மக்களுக்கு கொண்டாட எதுவும் இல்லை.

இதேபோன்று தான் ஹொங்கொங் மக்களின் நிலைமையும்.

சீன - வுஹான் நகரில் வெடித்த கொரோனா வைரஸ் பரவல் இன்று முழு உலகையும் பெரும் அழுத்தத்திற்குள் தள்ளியுள்ளது. மறுபுறம் லடாக் எல்லையைக் கடக்கும் முயற்சியால் இந்தியாவுடன் சீனா மோதலில் உள்ளது.

தெற்கு மங்கோலியர்கள் தங்கள் தனித்துவமான மொழி மற்றும் பௌத்த கலாசாரத்தை பராமரிக்க முடியாத நிலை உள்ளதாகவும் சுட்டிக்காட்டினர். (7-5)

## காபூல் மசூதியில் நடந்த குண்டுவெடிப்பில் 12 பேர் பலி



(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள ஈத்காஹ் மசூதிக்கு வெளியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட வெடிவிபத்தில் 12 பொது மக்கள் உயிரிழந்துள்ளனர்.

தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹிதின் தாயார் நினைவேந்தல் நிகழ்ச்சியை குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 32 பேர் காயமடைந்தனர்.

ஓகஸ்ட் இறுதியில் அமெரிக்கப் படைகள் வெளியேறிய பின்னர் ஆப்கானிஸ்தான் தலைநகரில் நடந்த மிக மோசமான தாக்குதல் இதுவாகும்.

இந்த வெடிகுண்டுத் தாக்குதலுக்கு உடனடியாக எவரும் பொறுப்பேற்கவில்லை.

ஆனால் சமீபத்திய வாரங்களில் தலிபான்கள் மீது தாக்குதல்களை முடுக்கிவிட்ட இஸ்லாமிய அரசு தீவிரவாதிகள் (ஐ.எஸ்.ஐ.எஸ்) மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. (7-5)

## சிறுவர்களுக்கான ஜைகோவ்-டி 3 டோஸ் தடுப்பூசி விலை ரூ.1900

(டில்லி)

இந்தியாவில் கொரோனா நோய்க்கு எதிராக கோவெக்சின், கோவிஷீல்டு, ஸ்புட்னிக்-வி போன்ற தடுப்பூசிகள் மக்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், அடுத்த கட்டமாக 12 முதல் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கும் தடுப்பூசி போடுவதற்கான திட்டத்தை ஒன்றிய அரசு வைத்துள்ளது.

ஜைடஸ் காடிலா மருந்து நிறுவனம், சிறுவர்களுக்காக 'ஜைகோவ்-டி' என்ற தடுப்பூசியைக் கண்டுபிடித்துள்ளது.

இந்த மருந்தை 3 டோஸ்களாகப் போட வேண்டும். இந்த 3 டோஸ் மருந்துக்கும் இந்த நிறுவனம் ரூ.1,900 விலை கேட்டு வருகிறது.

இது குறித்து ஒன்றிய சுகாதாரச் செயலாளர் ராஜேஷ் பூஷன் கூறுகையில்,

'ஊசியின்றி உடலில் செலுத்தும் வகையில் 3 டோஸ் கொண்ட ஜைகோவ்-டி தடுப்பூசி வந்துள்ளது.

இதன் விலை மற்ற தடுப்பூசி மருந்துகளை விட அதிகமாக உள்ளது.

எனவே, விலையைக் குறைப்பதற்காக மருந்து நிறுவனத்துடன் பேச்சு நடத்தி வருகிறோம்,'' என்றார். (7-5)

## ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலுக்கு வடகொரியா எச்சரிக்கை

(பியாங்யாங்)

ஆறு மாத இடைவெளிக்கு பிறகு மீண்டும் ஏவுகணை சோதனையை தொடங்கியுள்ள வடகொரியா ஒரே மாதத்தில் 4 ஏவுகணைகளை சோதித்து உலக நாடுகளை அதிர வைத்துள்ளது.

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளுக்குத் தடை விதிக்கும் கவுன்சிலின் தீர்மானங்களை முழுமையாக செயற்படுத்த வடகொரியாவுக்கு அழைப்பு விடுத்தது.

இந்த நிலையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு வடகொரியா பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து வடகொரிய வெளியுறவு அமைச்சகத்தின் மூத்த அதிகாரியான ஜோ சோல் சூ கூறுகையில் "அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளால் இதேபோன்ற ஆயுத சோதனைகளில் சமமாக பிரச்சினை எடுக்காததால், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் இரட்டைகையாளும் தரநிலை கொண்டது என்பது தெரிகிறது. வடகொரியாவின் இறையாண்மையை ஆக்கிரமிக்க முயன்றால் எதிர்காலத்தில் அது என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை சிந்தித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் செயற்பட வேண்டும்" என கூறினார்.(7-5)

## 'பண்டோரா பேப்பர்ஸ்'

## உலகத் தலைவர்களின் முறைகேட்டை பகிரங்கப்படுத்தும் ஆவணம் வெளியீடு

(பனாமா)

உலக நாடுகளின் அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் உள்ளிட்டோர் முறைகேடாக கோடிக்கணக்கான ரூபாயை வெளிநாடுகளில் முதலீடு செய்த ஆவணங்கள், "பண்டோரா பேப்பர்ஸ்" என்ற பெயரில் நேற்று முன்தினம் வெளியானது. பனாமா நாட்டைச் சேர்ந்த சட்ட ஆலோசனை நிறுவனமான மொசாக் போன்செகா, ஒரு கோடிக்கும் அதிகமான இரகசிய ஆவணங்களை, "பனாமா பேப்பர்ஸ்" என்ற பெயரில் 2016 இல் வெளியிட்டது.

பாக்., முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் உள்ளிட்ட பிரபலங்களின் பெயர்கள் இதில் இடம் பெற்றிருந்தன. அதேபோல் நேற்று முன்தினம் பண்டோரா பேப்பர்ஸ் என்ற பெயரில் இரகசிய ஆவணங்கள் வெளியிடப்பட்டன.

ஜோர்தான் மன்னர் அப்துல்லா, பிரிட்டன் முன்னாள் பிரதமர் டோனி பிளேர் மற்றும் அவரது மனைவி ஷெரி பிளேர், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின். செக் குடியரசு பிரதமர் ஆண்ட்ரேஸ் பாபிஸ், கென்யா ஜனாதிபதி உஹுரு உள்ளிட்டோர் பல கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடாக சொத்துக் குவித்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது. மேலும், சைப்ரஸ் நாட்டு ஜனாதிபதி நிக்கோஸ் அனஸ் தேசியேட்ஸ், உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, ஈக்வடோர் ஜனாதிபதி கில்லர்மோ லாசோ உட்பட பல நாடுகளின் அரசியல் தலைவர்களும் இந்தியாவைச் சேர்ந்த தொழிலதிபர்கள், மக்கள் பிரதிநிதிகள், விளையாட்டு பிரபலங்கள் உட்பட, 300க்கும் மேற்பட்டோரின் பெயர்களும் இதில் இடம் பெற்றுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. (7-5)

# பிரதேச செயலக அறிவித்தலுக்கு எழுத்து மூல விளக்கம் கோரல்

## மனிதவுரிமை ஆணைக்குழுவினால் வடமாகாண இணைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா பிரதேச செயலகத்தினுள் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களை மாத்திரமே அனுமதிக்க முடியும் என பிரதேச செயலர் அறிவித்துள்ள நிலையில், அது தொடர்பில் இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் வடமாகாண இணைப்பாளர் எழுத்து மூலமான விளக்கம் கோரியுள்ளாளர்.




வவுனியா பிரதேச செயலகத்தினுள் சேவை பெற வருவோர் அடையாள அட்டையையும், தடுப்பூசி அட்டையையும் கைவசம் வைத்திருக்க வேண்டும் என்றும், தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதோர் பிரதேச செயலகத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது. அது தொடர்பில் சமூக ஊடகங்கள் மற்றும் இணைய ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்த நிலையில், மனிதவுரிமை ஆணைக்குழு பிரதேச செயலாளரிடம் அது தொடர்பில் எழுத்து மூலமான விளக்கத்தினை கோரியுள்ளது. (7-5-6-33)

# கந்தபுர பகுதி காணியானது அரச காணியாக கையளிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள கரும்பு தோட்ட காணியானது அரச காணியாக பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த காணியை 2018ம் ஆண்டு முதல் ஆக்கிரமிப்பு செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து பிரதேச மக்களின் முயற்சியால் குறித்த காணியை மக்கள் பயன் பாட்டுக்கு கையளிக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலாளர், நில அளவையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு மக்கள் பயன்பாட்டிற்கு காணியை கையளித்தனர்.

இதன் போது கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர் 196 ஏக்கர் அரச காணி மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்கப்படுகின்றது.

குறித்த காணியினை 196 பயனாளிகள் 12 கிராமமட்ட அமைப்புக்களினால் தெரிவு செய்யப்பட்டு கிராம சேவையாளரின் சிபாரிசுடன் கையளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த காணியில் ஏறத்தாழ 150 ஏக்கர் மாத்திரமே வயற்காணியாகும். ஏனையவை மேட்டுநில மாகும்.

அதற்கேற்ப பகிர்ந்தளிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். (7-5-6-100-315)



யாழ் தீவகத்தின் வேலணை பிரதேச செயலர் பிரிவில் உள்ள அல்லைப்பிட்டி சென்பிலிப்ஸ் விளையாட்டுக் கழகம், வேலணை மேற்கு சிற்பனை ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம், அல்லைப்பிட்டி வெண்புரவி விளையாட்டுக் கழகம் ஆகிய மூன்று விளையாட்டு கழகங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் அண்மையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. (படம்-யதுபாஸ்கரன்)

# சிறுநீரக நோய் தாக்கம் உள்ள பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த்திட்டம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் சிறுநீரக நோய்த் தாக்கம் அதிகமாகவுள்ளதால் அவ் இடங்களை தெரிவு செய்து 41 இலட்சம் ரூபாய் பெறுமதியான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் நடைமுறைப்படுத்தப்பவுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து நேற்று கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா வடக்கில் முத்துமாரிநகர் கிராம மக்களின் வாழ்வாதரத்திற்காக 135 ஏக்கர் வயற் காணியை விடுவிப்பதற்கான முதல் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்நாட்டியகுளம் கிராமத்தில் 18 குடும்பங்கள் வனஇலாகாவின் பகுதியில் கொட்டில்களை அமைத்து இருப்பதால் தமக்கான குடிநீர், மலசல கூடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளைப் பெற முடியாது இருக்கின்றனர். அவர்களுக்கான தீர்வும் தற்போது பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (7-5-6-250)

# வாள்வெட்டில் ஈடுபட்ட 6 பேர் கைது

(குருமன்காடு)

வவுனியா, கோவில்குளம் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவம் தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் வாள்வெட்டுத் தாக்குதலில் நால்வர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் பாதிக்கப்பட்டவர்கள் சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஆறு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், சிசீரிவி மற்றும் மக்களின் நேரடி வாக்கு மூலத்தின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் சிதம்பரபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (7-5-6-250)

# கல்மடுநகர் பகுதியில் யானைகள் அட்டகாசம்

(முறிகண்டி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் பகுதியில் அறுவடைகாலங்களில் மட்டும் பயிர்களை அழித்து வந்த காட்டு யானைகள் தற்பொழுது அறுவடைமுடிந்து ஒரு மாதம் கடந்த நிலையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

தினமும் இரவு வேளைகளில் மக்கள் குடியிருப்புகளுக்குள் வரும் யானைகள் பயன் தரக்கூடிய பயிர்களை அழித்து வருகிறது.

மிக அச்சத்தின் மத்தியில் ஒவ்வொரு நாளும், கடக்க வேண்டிய நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

எனவே மக்களின் நலனில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-5-6-100-316)



கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவில் ' சமுர்த்தி சுபீட்சத்தின் நோக்கு சௌபாக்கியா ' வாரத்தின் இறுதி நிகழ்வில் பயனாளிகளுக்கான புதிய வீடு கையளிப்பு மற்றும் வீட்டுத்திட்டக் கொடுப்பனவுகள் என்பன வழங்கும் நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை இரணைமாதாநகர் ஜெயபுரம் மற்றும் பொன்னாவெளி உள்ளிட்ட பிரதேசங்களில் நடைபெற்றன. (படம்-யதுபாஸ்கரன்)

# மன்னாரில் 12-19 வயதினருக்கான பைசர் தடுப்பூசி திட்டம் ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் விசேட தேவையுடைய மற்றும் நீண்ட நாட்களாக சுகயீனமுற்று இருந்த 12 வயது தொடக்கம் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான பைசர் தடுப்பூசியின் முதலாம் கட்ட தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்று மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார துறையினர் இராணுவம் மற்றும் விமானப்படை ஆகியோரின் ஒத்துழைப்புடன் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

12 வயது தொடக்கம் 19 வயதிற்கு உட்பட்ட விசேட தேவையுடைய மற்றும் நீண்ட நாட்களாக சுகயீனமுற்று உள்ளவர்களுக்கு இன்று செவ்வாய் மற்றும் நாளை புதன் கிழமை ஆகிய இரு தினங்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பைசர் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7-5-6-285)

# அத்தியாவசிய உணவு தட்டுப்பாட்டில், வர்த்தகச் சட்டமும், அவசரகாலச் சட்டமும்

## Commercial Laws and Emergency Laws in Scarecity of Essential Food Items 02




பேராசிரியர்

**செ.இளங்குமரன்,**

**B.Sc(Hons), M.Stat, Ph.D, LLB**

புள்ளிவிவரவியற் பேராசிரியர், பொருளியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


### 3. உணவுச் சட்டத்திலுள்ள குறைபாடுகள், இடைவெளிகள்

### Drawbacks and Loopholes in Food Act

இச்சட்டம் 1980 இல் கொண்டு வரப்பட்டதற்கான காரணம், அப்போது நடைமுறையிலிருந்த சட்டங்களான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், நியாயவர்த்தக ஆணைக்குழுச் சட்டம் என்பன உணவுப் பண்டங்களின் உற்பத்தி, வியாபாரம் தொடர்பில் பொருத்தமான ஏற்பாடுகளின்றி வலுவற்றிருந்தமையாகும். (1) நடைமுறையிலிருந்த உணவு, மருந்துக்கான (1961 திருத்தத்துடன்) கட்டளைச் சட்டத்தினை இல்லாதொழித்தல் (2) உணவு ஆலோசனைச் சபையொன்றை (Food Advisoty Committee) நிறுவி (3) உணவுப் பொருட்களை உற்பத்தி-இறக்குமதி செய்தல், விநியோகித்தல், விற்பனை-செய்தல் என்பனவற்றை ஒழுங்குபடுத்தி-கட்டுப்படுத்துதல் (4) எதிர்பாராமல் ஏற்படும் விடயங்களை கையாளுதல் எனும் நோக்கங்களுடன் இச்சட்டம் ஆக்கப்பட்டுள்ளது.

1991, 2011 ஆம் ஆண்டுத் திருத்தங்களுடன், இச்சட்டவாக்கம் தற்போதைய உணவுச்சூழலைக் கையாள்வதற்குப் போதுமான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளதா என நோக்குவோம். இச்சட்டத்தின் பாகம் 1, உணவுப் பண்டங்களின் பதிவு, தரம், சுகாதாரம், நியமம், உரிமம், கலப்படம், உத்தரவாதம், மாற்றுப்பயன்பாடு, கட்டுத்துண்டிடல், பொதியிடல் தொடர்பில் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவை தொடர்பில் ஒழுங்குவிதிகள் (Food Regulations, 1986) வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளன. ஏற்பாடுகள், ஒழுங்குவிதிகள் தற்போது புதிதாக எழுந்துள்ள பிரச்சனைகளைக் கையாள்வதற்கு பொருத்தமற்றவையாகும். அப்பிரச்சனைகளும், அவ்வேறுபாடுகளும், அவ்வொழுங்கு விதிகளும் வழமையான சட்டநடவடிக்கைகளுக்குட்பட்டவையாகும். அப்பிரச்சனைகள் அங்கொன்று இங்கொன்றாக ஏற்படுபவையாகவும் முழுச்சமூகத்தையும் ஒரேநேரநெருக்கடிக்குள் உட்படுத்துபவையாக இருக்கவில்லை.

பாகம் II, உணவு ஆலோசனைச்சபை அமைக்கப்படல், அச்சபையின் கடமைகள், நியமிக்கப்பட்ட, தேவைகருதி நியமிக்கப்படக்கூடிய அதிகாரிகள், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள், அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள், அவ்வுத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரங்கள் பற்றிய ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. தற்போதைய பிரச்சனை அத்தியாவசிய உணவுப் பண்டங்களை "பதுக்கி வைத்திருத்தல்", "செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்துதல்", "உயர்வு விலையில் விற்றல்" என்பனவாகும். இப்பாகத்திலுள்ள பிரிவு 14 இன் ஏற்பாடுகள் மூலம் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் உணவுப் பொருட்களைத்தேடும், பரிசோதிக்கும், தடுத்துவைக்கும், கைப்பற்றும் அதிகாரங்களை பாகம் I இல் கூறப்பட்ட காரணங்களுக்காக மட்டுமே சாதாரண சட்டத்தின் கீழ்ப் பிரயோகிக்க முடியும்.

பாகம் II, இன் பிரிவு 13(3) ஆனது ஒரு அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர், 1979 ஆம் ஆண்டின் **குற்றவியல் நடபடி முறைச் சட்டத்தின்** (Criminal Procedure Act, No.15 of 1979) மூலம், ஒரு பொலிஸ் அதிகாரியின் அதிகாரங்களைப் பயன்படுத்த முடியுமெனக் கூறுகின்றது. இவ்வதிகாரத்தை பாகம் I இல் கூறப்பட்ட காரணங்களுக்காக மட்டுமே பிரயோகிக்க முடியும். இருந்தபோதிலும், பிரிவுகள் 13(3) மற்றும் 14 இன் ஏற்பாடுகள் நடை முறைப்படுத்தப்பட்டாலும் கூட, பிரிவு 15 இன் படி நீதவான் நீதிமன்ற நடவடிக்கையொன்றின் மூலமே கைதுசெய்யப்பட்ட வியாபாரிக்கு எதிராகவும், கைப்பற்றப்பட்ட பண்டம் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கமுடியும். எனவே தற்போது நாட்டிலுள்ள மேற்படி பிரச்சனைக்கு உடனடியான தீர்வு இச்சாதாரண சட்டத்தில் காணப்படவில்லை.

பாகம் III, வியாபாரிகளினால் ஏற்படுத்தப்படும் குற்றங்களுக்கான சட்டநடவடிக்கைகள் பற்றி விளம்புகின்றது. இச்சட்டத்தின்படி இழைக்கப்படும் குற்றங்களுக்கே அவ்வாறான சட்டநடவடிக்கைகள் விபரிக்கப்படுகின்றன. அதாவது பாகம் I இல் விவரிக்கப்பட்ட முறை கேடுகளுக்கே அவை உள்ளன. அதாவது, உணவுப் பண்டங்களில் பதிவு, தரம், சுகாதாரம், நியமம், உரிமம், கலப்படம், உத்தரவாதம், மாற்று பயன்பாடு, கட்டுத்துண்டிடல், பொதியிடல் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அவற்றின் கீழான ஒழுங்கு விதிகளை மீறியமைக்காக குற்றஞ்சாட்டப்படும் நபர்களுக்கெதிராகவே சட்டநடவடிக்கை மேற்கொள்ள முடியும். ஆனால் உணவுப் பண்டங்களை பதுக்கி வைத்திருத்தல், செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்துதல், உயர்வு விலையில் விற்றல் தொடர்பாக எந்த நடவடிக்கையையும் இச்சட்டத்தின் கீழ் எடுக்க முடியாது.

இச்சட்டவாக்கத்தின் நான்கு நோக்கங்களில் (3) ஆவதுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளே உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனால் தற்போதைய சூழ்நிலையினை இச்சட்டத்தின் மூலம் கையாள முடியாது. நோக்கம் (4) இற்கான ஏற்பாடுகள் பாகம் IV இல் கூட வெளிப்படையாக இல்லை. மந்திரியிற்கு பிரிவு 32 ஊடாக வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளை வழங்கும் அதிகாரங்கள் கூட பயனளிக்காது.

### 4. நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின் பலமும், பலவீனமும்

### Strength and Weakness in Consumer Affairs Authority Act

இச்சட்டமானது 1983 இல் கொண்டு வரப்பட்டதற்கான முக்கிய காரணம் அப்போது நடைமுறையிலிருந்த மூன்று சட்டங்களான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், நியாய வர்த்தக ஆணைக்குழுச் சட்டம் என்பன பாவனையாளர் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வலுவான ஏற்பாடுகள் எதனையும் கொண்டிருக்காமையினால் அவற்றை இல்லாதொழித்து புதிய சட்டவாக்கத்தினை கொண்டுவருதலாகும். இச்சட்டத்தின் பாகம் I, இன்மூலம் **நுகர்வோர்-விவகார-அதிகார சபை**யும், பாகம் IV, இன்மூலம் **நுகர்வோர்-விவகார-பேரவை**யும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. நுகர்வோர்-விவகார-அதிகாரசபையானது பொதுவாக **பாவனையாளர்-பாதுகாப்பு-அதிகார சபை** எனப்படுகின்றது. பாகம் II, நாட்டின் வர்த்தகச்சூழலை ஒழுங்குபடுத்துவதாகவும், பாகம் III, பாவனையாளர்களின் விருப்பங்கள், போட்டி வர்த்தகம் என்பனவற்றை விருத்தி செய்வதாகவும் உள்ளன.

இச்சட்டத்தின் பாகங்கள் II, III இலுள்ள ஏற்பாடுகள் தொடர்பான மீறல்களை விசாரிக்கவும், தீர்த்து வைக்கவும் பாவனையாளர்-பாதுகாப்பு-அதிகாரசபைக்கு **(பா.பா.அ.சபை)** அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீடுகளை விசாரிப்பதற்காக மட்டுமே நுகர்வோர்-விவகார-பேரவை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பா.பா.அ. சபையின் நிறைவேற்று அதிகாரங்கள், பாகம் II இன், பிரிவு 6 இன்படி, தேவைக்கேற்ப நியமிக்கப்பட்ட அரச அலுவலர்கட்கு பகிர்ந்தளிக்கப்படும். இலங்கையின் வர்த்தகச் சட்ட வளர்ச்சியில் ஏற்கனவே இருந்த பலகுறைபாடுகளையும், இடைவெளிகளையும் சீர்செய்யும் படி முறையாகவே இச்சட்டம் ஆக்கப்பட்டுள்ளது.

பிரிவு 7 இன் படி பா.பா.அ. சபைக்கு நான்கு பிரதான **குறிக்கோள்கள்** உள்ளன. அவை யாவன:

(1) நுகர்வோரின் வாழ்க்கை, சொத்துக்களுக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்களை சந்தைப்படுத்துதல், சேவைகளை வழங்குதல் ஆகியவற்றிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல்.

(2) நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்து அவர்களின் விருப்பங்கள், உரிமைகளுக்கு உத்தரவாதமளித்தல்.

(3) போட்டிச்சந்தை விலைக்கேற்ற வகையில் பொருட்களும், சேவைகளும் நுகர்வோருக்கு போதுமானளவு கிடைப்பதை இயலுமானவரை உறுதிப்படுத்தல்.

(4) முறையற்ற, மட்டுப்படுத்தப்பட்ட வணிக நடவடிக்கைகள், வேறுவழிகளில் சுரண்டுதலிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்து பரிகாரங்கள் கிடைக்க வழிசெய்தல்.

பா.பா.அ.சபையின் **செயற்பாடுகளில்**, பிரிவு 8 இன்படி, தற்போதைய நிலைமைக்குத் தொடர்புடையவை:

(1) "வர்த்தகர்கள் தமக்குள் மட்டுப்படுத்திய-வர்த்தக-உடன்பாடு, அறா-விலை-நிர்ணயம் செய்தல்", "தனி-வர்த்தகர் சந்தையினுள்-ஆதிக்கம்-துஷ்பிரயோகம் செலுத்தி முதன்மை நிலை அடைதல்", "வர்த்தகத்தைப் பாதிக்குமாறான போட்டியினை தவிர்க்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்" எனும் நிலைமைகளை நீக்கும்-கட்டுப்படுத்தும் செயற்பாடு,

(2) "போட்டிச்சந்தை செய்முறைக்கு மாறாக இயங்கி துஷ்பிரயோகம் மூலம் முதன்மை நிலையினை அடைபவர்கள்" தொடர்பில் புலனாய்வு, விசாரணைச் செயற்பாடு,

(3) பண்டங்களையும், சேவைகளையும் வழங்குவோரிடையில் திறன் போட்டியினை விருத்திசெய்து, பராமரித்து, திறனற்ற போட்டியில் போட்டி விலையினை விருத்தி செய்யும் செயற்பாடு,

(4) "விலை-கையிருப்பு-தரம் தொடர்பாக பண்டங்கள்-சேவைகள் பன்முகமாக வழங்கப்படுதலை உறுதி செய்து, நுகர்வோர், கொள்வனவாளர், வேறுபயனாளிகளின் உரிமைகள்-விருப்புகளை, பாதுகாத்து விருத்தி செய்யும் செயற்பாடு,

(5) இச்சட்டத்திலுள்ள விடயங்கள் தொடர்பிலும், ஏற்பாடுகளை மீறுவோர் தொடர்பிலும், புலனாய்வு செய்து விசாரணை செய்யும் செயற்பாடு, என்பனவாகும்.

பா.பா.அ.சபை, பாகம் II இன், பிரிவு 9 இன்படி, பின்வரும் **நடவடிக்கைகளை** மேற்கொண்டு உள்நாட்டு வர்த்தகத்தினை ஒழுங்குபடுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(1) நுகர்வோர்க்கு கிடைக்ககூடிய எவ்வகை பண்டங்கள், சேவைகளினதும் விற்பனை-வழங்கல்தொடர்பில் விசாரணை-ஆய்வுகளை நடத்தி போதுமான-அளவில், நியாயமான-விலையில், திருப்தியான-தரத்தில் பண்டங்கள்-சேவைகள் நுகர்வோர்க்கு கிடைப்பதை உறுதிப்படுத்துதல்,

(2) மேலே (1) இல் சொல்லப்பட்ட நோக்கத்துக்காக அரசுக்கும், நுகர்வோர் சங்கம் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களுக்கும் உதவுதல், ஊக்குவித்து மேம்படுத்துதல்,

(3) இச்சட்டத்தின் பிரிவு 14 இலுள்ள நோக்கங்களுக்கேற்ப, வர்த்தக சங்கங்களுக்கு உதவி செய்து, ஊக்குவித்து அவர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல்.

இச்சட்டத்தின் பிரிவு 14 ஏற்பாடு செய்வது என்னவெனில்,

(1) பண்டமொன்றுக்கான உச்சவிலை, நியமம், விபரக் குறிப்பு, வேறு அவ்வாறான சிறப்பியல்புகளை உற்பத்தி, இறக்குமதி, களஞ்சியப்படுத்தல், பொதியிடல், விநியோகம், விற்பனை தொடர்பில் வர்த்தகர் சங்கங்கள், இறக்குமதியாளர்களுடன் எழுத்துமூல ஒப்பந்தம் மேற்கொள்ளுதல்,

(தொடரும்...)

# எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க அரசு முயற்சி

## தேரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**சோமாலியா, ஆப்கானிஸ்தான் மற்றும் எத்தியோப்பியாவிற்கு நேர்ந்த நிலைமையே இலங்கைக்கும் நேரிடும் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் திருகோணமலைக்கு சென்று எண்ணெய்த் தாங்கிகளைப் பரிசோதனை செய்ததன் நோக்கம் மோசடியான வர்த்தக நட வடிக்கை ஒன்றை மேற்கொள்ளவே என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.**

எனவும் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித் துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

எஞ்சியுள்ள 85 எண் ணெய் தாங்கிகளையும் இந்தியாவிடம் ஒப்படைக்க அரசாங்கம் முயற்சிக்கி ன்றது.

நாட்டின் சொத்துக் களை இவ்வாறு கொள்ளை விலையில் விற்பனை செய்வதற்கு தற்போதைய ஆட்சியாளருக்கு உள்ள உரிமை என்ன?

இந்த நடவடிக்கை மிகப் பெரிய ஓர் பாவச்செயல், தூர நோக்கற்ற எதேச்சா திகார செயலாகும். தேசிய சொத் துக்கள் கொள்ளை யிடப்படு வதற்கு எதிராக மக்கள் அணி திரள வேண் டும்.

எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அரசாங்கம் இந்த விடயங்களை செவி சாய்ப்பதில்லை.

எதிர்காலத்தில் ஆட்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்கு இல்லை என்றே நினைக் கின்றேன் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித் தார். (4-5)

# கொழும்பு துறைமுகத்தில் 13 ஏக்கர் சீன நிறுவனத்திற்கு விற்பனை

(கொழும்பு)

நாட்டின் ஆட்சியாள ர்கள், ராஜபக்ஷ என்ற பெயரைச் சீரழித்துள்ள னர். கொழும்பு துறைமுக த்தில் உள்ள 13 ஏக்கர் நிலப்பரப்பைச் சீன நிறுவ னத்திற்கு விற்பதற்கான வேலைத்திட்டங்கள் இடம் பெ றுகின்றன என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தெரி வித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய பத்து அம்சக்கொள்கைத் திட்டத்தை முன்வைத்தார். ஆனால் தற்போது மக்கள் அவற்றோடு அவரையும் விரட்டியடிக்கின்ற நிலை யில் இருக்கினறார்கள். அதில் முதலாவது அம்சம் பாதுகாப்பு சம்பந்தமானது.

இரண்டாவது சீரமைக் கப்படாத நட்பு ரீதியான மற்றும் வெளியுறவுக் கொள்கையாகும். யுக தனவி எரிசக்தி நிலையம் நடுராத்திரியில் அமெரிக்க நிறுவனத்திற்கு விற்க ப்பட்டுள்ளது. அத்துடன் அமைச்சரவையில் இருக் கின்ற எரிசக்தி அமைச்ச ருக்குக் கூட இது தெரி யாமல் விற்பனை செய்ய ப்பட்டிருக்கின்றது.

இந்த ஒப்பந்தத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, விசேட செயற்றிட்ட அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகி யோரே கைச்சாத்திட்டுள் ளனர். இதில்உள்ளடங்கிய விடயங்கள் அவர்களுக்கு மாத்திரமே தெரியும்.

திறைசேரியிடம் காண ப்பட்ட 50 வீத உரிமத்தில் 40 வீதம் இதன்போது விற்கப்பட்டுள்ளது.

தற்போது கொழும்பு துறை முகத்தின் மேற்கு முனையம் இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு விற்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாரா ளுமன்றத்தின் அனுமதி பெறப்பட்டதா? கொழும்பு துறைமுகத்தில் உள்ள 13 ஏக்கர் நிலப்பரப்பைச் சீன நிறுவனத்திற்கு விற்ப தற்கான வேலைத்திட்ட ங்கள் இடம்பெறுகின் றன.

இந்தியாவுக்கு மேற்கு முனையம் வழங்கப்படு கின்றது என்றவுடன், சீனாவைச் சமாளிப்பத ற்காக இந்த நிலப்பரப்பை வழங்குவதற்கு முயற்சிக் கின்றார்கள்.

இது தானா வெளி நாட்டுக் கொள்கை. நாட் டையும், நாட்டு வளத் தையும் பாதுகாக்க வேண் டும் என்று கூறியவர்கள் இப்படித் தானா நாட்டைப் பாதுகாக்கின்றார்கள்? என தலதா அத்துகோரல கேள்வி எழுப்பியுள்ளார். (4-5)

# மேலும் 3 இலட்சம் பைசர் நாட்டை வந்தடைந்தது



(கொழும்பு)

இலங்கைக்கு மேலு மொரு தொகை பைஸர் தடுப்பூசிகள் நேற்று காலை கொண்டு வரப்பட் டுள்ளன.

அதன்படி, 3 இலட்சத்து நாலாயிரம் பைஸர் தடுப் பூசிகள் நாட்டுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

அரசாங்கத்தினால் முன் பதிவு செய்யப்பட்ட 40 இலட் சம் பைஸர் தடுப்பூசிகளின் முதலாம் தொகுதியே இவ் வாறு நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (4-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கடவுச் சீட்டு

இந்த உலகமே எனக்குச் சொந்தம். இப்படிச் சொல்வது விசாலமான மனதைக் காட்டுகின்றது உண்மை தான். இருந்தாலும் நடைமுறையில் அதிலே கொஞ்சம் சிக்கல் உண்டு.

இப்பொழுது ஒரு நாட்டிலேயிருந்து இன்னொரு நாட்டுக்குப் போகவேண்டும். எங்களை நினைத்தவுடனே யாருடைய அனுமதியும் இல்லாமல் போய்விட்டு வந்திட முடியுமா?எங்கள் நாடு நீ போகலாம் என்று சொல்ல வேண்டும். இன்னொரு நாடு நீ வரலாம் என்று சொல்ல வேண்டும்.பின்பு தான் பிரயா ணத்தையே ஆரம்பிக்க முடியும்.எங்கள் நாடு நீ போகலாம் என்று சொல்கின்றது பாருங்கள். அதுதான் கடவுச் சீட்டு. அந்த நாடு நீ வரலாம் என்று சொல்ல வேண்டும்.

அந்த நாடு நீ வரலாம் என்று சொல்கின்றது பாருங்கள் அது தான் விசா..

அந்தக் காலத்திலேயெல்லாம் ஒரு தேசத்து ராஜாவின் தூதர்கள் அல்லது அதிகாரிகள் இன்னொரு தேசத்துக்குப் போகின்றார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த சமயத்திலே அரசனிடம் இருந்து நன்னடத்தைக் காகிதம் அல்லது முத்திரை மோதிரம் வாங்கிக் கொண்டு போவது வழக்கம். பேரஸ்.. என்னும் புல் இதழ்கள் மேலே இந்தச் சான்றிதழ்கள் எழுதப்படும்.அதிலே ராஜ முத்திரைகள் இடப்படும். அதை எடுத்துக் கொண்டு போகவேண்டும்.

அப்பொழுதெல்லாம் வெளிநாடு போவது என்பது விதியோடு விளையாடுவது மாதிரி. எப்பொழுது போய் சேருவார்கள் எப்பொழுது வந்து சேருவார்கள்.. பத்திரமாக வருவார்களா.ஒன்றும் தெரியாது.

இப்பொழுதெல்லாம் காலையில் போய்விட்டு மாலை திரும்பி வந்து விடுகின்றார்கள்.இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த ரோமாபுரி மன்னன் அகஸ்டஸ் சீஸர். அவன் கொடுத்த பாஸ்போர்டிலே உள்ள வாசகம் என்ன தெரியுமா? இதைக் கொண்டு வருகின்ற பயணிக்கு, பூமியிலே, கடலிலே எவனாவது துன்பம் செய்விக்க முடிவுசெய்தால் அப்படிச் செய்யும் முன் சீஸரை எதிர்த்துப் போரிடும் அளவுக்குத் தனக்குப் பலம் இருக்கின்றதா என்பதை யோசிப்பானாக . இது தான் அந்த வாசகம்.

அதற்குப் பின் 1780 இலே தான் முதன் முதலில் அமெரிக்கப் பாஸ்போர்ட் வழங்கப்பட்டதாம். 1780 ஜுலை 7 ஆம் திகதி. அதிலே காணப்படுகின்ற வாசகம் என்ன தெரியுமா?

சட்ட சம்பந்தமான காரியங்களுக்காக வெளிநாடுகளுக்கு விஜயம் செய்ய விரும்பும் அமெரிக்க ஐக்கியநாடுகளின் பிரஜை என்று எழுதியிருக்கிறது. அப் பொழுது அரசுச் செயலாளராக இருந்த தாமஸ் பிக்கரிங் அதிலே கையெழுத்துப் போட்டிருக்கின்றார்.ஆதிகாலத்து அமெரிக்கப் பாஸ்போர்ட்களிலே அதை எடுத்துக் கொண்டு வருகின்ற ஆசாமி பற்றிய வர்ணனைகளும் இருக்குமாம்.

1914 ஆம் ஆண்டிலே தான் முதல் தடவையாக புகைப்படம் இணைக்கின்ற பழக்கம் உண்டாகியது. நல்ல பாஸ்போர்ட் ஆரம்பமான கதை இது.

கள்ள பாஸ்போர்ட் ஆரம்பமான கதை தெரியுமா? இரண்டாவது உலக மகாயுத்தம். அதற்குச் சில ஆண்டுகள் முன்னால் அது ஆரம்பமாகி விட்டது.ஜேர்மனியிலே ஹிட்லர் தோன்றினார். யூதர்களை விரட்டினார். ஜேர்மனியில் இருந்து மட்டுமல்ல ஐரோப்பாவிலேயிருந்தே விரட்டினார். அவர்கள் பாஸ்போர்ட் எல்லாம் பறிமுதல் செய்தார்கள். சித்திரவதைக் கூடங்களுக்குக் கொண்டு வந்து போனார்கள். தப்பித்தவர்கள் ஐரோப்பாவிலே நாடு நாடாக அலைந்தார்கள்.

அவர்கள் கையிலே பாஸ்போட் இருந்தால் பயமில்லாமல் வாழலாம். இதனால் கள்ள பாஸ்போர்ட் வியாபாரம் ஆரம்பமாகியது.

இறந்து போன அல்லது காணாமல்போன ஜேர்மன், ஆஸ்திரிய பிரெஞ்ச் படைவீரர்களின் பாஸ்போர்ட்களை திருடிக் கொண்டு வந்து கள்ளச் சந்தையில் அதிக விலைக்கு விற்க ஆரம்பித்துவிட்டார்களாம்.

ஏராளமான அகதிகள் இறந்துபோன படைவீரர்கள் பெயரிலேயே வாழ்ந்தா ங்களாம். அவர்களை மாதிரியே முடிவெட்டிக் கொண்டார்களாம்.

படைவீரர்களைக் கடத்திக் கொண்டு போய் கொன்று புதைத்துவிட்டு அவர்களுடைய பாஸ்போர்டுகளை கொண்டு வரும் கும்பல்கள் கூட இருந்து தாம்.இந்தக் காலத்திலேயும் பொய்யான பெயரிலே சுற்றுகின்றவர் உலகம் முழுவதும் உண்டு. மாட்டிக் கொள்ளும் போது தான் உண்மை வெளியில் வருகின்றது.


ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்குள்ளே அடிவைக்கிறதில் இவ்வளவு சிரமம் இருக்கு. எங்கள் ஊருக்குள்ளேயே ஒரு பஸ்சுக்குள்ளேயே அடி வைக்கிறதிலே கூட எவ்வளவு சிரமம் இருக்கு தெரியுமா?

ஒரு டவுன்பஸ்.. உள்ளே ஏகப்பட்ட கூட்டம். அதற்குள்ளே நுழையிறதற்கு நிறைய நேரமாக ஒருத்தர் முயற்சி செய்து கொண்டிருந்தார். உள்ளே நின்று கொண்டிருந்த ஒருத்தர் கத்தினார்.ஏன்யா இப்படி முண்டியடித்துக் கொண்டு கிடக்கின்றாய். அடுத்த பஸ்ஸிலே வந்தால் நீ போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர முடியாதா என்றார்.

நான் போய்ச் சேரமுடியும். ஆனால் நீங்கள் போய்ச் சேர முடியாது என்றார். என்னய்யா சொல்கின்றாய்? என்றார் அவர் எரிச்சலோடு. இவர் நிதானமாக சொன்னார். நான் தாங்க இந்த பஸ் டிரைவர் என்றார்.




## மலைப்பாம்பும் மான்குட்டியும்



ஆற்றில் மான் நீந்தியது. இதே மரத்திலிருந்துதான் குரட்டி ஒருநாள் ஒரு சிறுத்தையை மடக்கிப் பிடித்தது.

இறப்பர் போன்ற தனது உடம்பை கயிறு போல் பாவித்து இறுக்கிய வேகத்தில் சிறுத்தையின் எலும்புகள் மடமடவென்று முறிந்தன.

மான் கரையேறி விட்டது. குரட்டி அசையாமல் இருந்தது. அந்த மரத்திற்கு அருகாமையில் வந்த பாதையில் சுற்றிப் பார்த்தபடி நடந்து வந்தது அந்த மான்.

சொல்லி வைத்தது போல் அந்த மரத்தடியில் வந்து நின்றது. குறட்டி மான்குட்டியின் கழுத்தில் மாலையாய் விழுந்தது.

"அம்மா" என்று கதறியது மான்குட்டி. எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்து போனது. அப்படி இப்படி கூட அசையாமல் நின்றது.

குறட்டிக்குக் கூட ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. குறட்டி அதன் முகத்தைப் பார்த்தது பாவமாக இருந்தது. அதற்குள் குறட்டி இறப்பர் போன்ற நீண்ட தனது உடலால் மானைச் சுற்றியது.

மான் தேம்பி அழுதது. அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது. குறட்டி இப்படி திடீர் தாக்குதல் நடத்தும் போது எந்த ஒரு மிருகமும் இதனிடம் தப்பிக்க போராட்டம் நடத்துமே தவிர இப்படி அழுது ஆர்ப்பாட்டம் செய்யாது.

"ஆமாம்... ஏன் அழுகிறாய்" என்றது குறட்டி. மான் தனது அழுகையை நிறுத்தி விட்டு உறுதியான குரலில் சொன்னது.

"இப்போது சாவு என்பது நிச்சயமாகி விட்டது. சாகும் முன்னர் அம்மாவின் உயிரைக் காப்பாற்றிய பெருமையாவது என்னைச் சேரும். நீங்கள் மனது வைத்தால் எனக்கு உதவலாம்" என்றது.

"நான் எப்படி உதவ முடியும்?" என்றது.

(தொடரும்)

# மகாபாரதம்

204



அவர்கள் விரும்பியபடி அசுரன் பொன்னையும், பொருளையும் வாரி வழங்கினான்.

மற்றவர்களைப் போல கௌதமனும் நிறைந்த செல்வத்தைப் பெற்றுக் கொண்டு பெரும் பாரத்தைச் சுமப்பது போலச் சுமந்து கொண்டு ஆலமரத்தை அடைந்தான். அவன் பசியாலும் வழி நடந்த களைப்பாலும் சோர்ந்திருந்தான்.

சிறிது நேரத்தில் ராஜதர்மா அந்தணனை வரவேற்று, தன் சிறகுகளால் வீசி அவன் களைப்பைப் போக்கியது.

அப்போது "இந்த பெருஞ்சுமையைத் தூக்கிக் கொண்டு நெடுந்தூரம் செல்ல வேண்டுமே... வழியில் உண்பதற்கு உணவு ஏதும் இல்லையே" எனச் சிந்தித்தான்.

நன்றி கெட்ட கௌதமன் இந்தப் பறவை அதிகம் சதைப்பற்றுள்ளதாய் இருக்கிறது. இதனைக் கொன்று இதன் மாமிசத்தை எடுத்துச் சென்றால் தேவைக்கு அதிகமாகவே கிடைக்கும் என்னும் முடிவுக்கு வந்தான்.

சிறந்த பறவையான ராஜதர்மா அதிக ஒளியுள்ள தீயை மூட்டி, கௌதமனின் குளிரைப் போக்கிவிட்டு அவனிடம் கொண்ட நம்பிக்கையுடன் தூங்கலாயிற்று.

கௌதமன் தூங்கிக் கொண்டிருந்த பறவையை தீயில் இட்டுப் பக்குவப்படுத்தி, செல்வங்களையும், பறவையின் மாமிசத்தையும் எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

பறவை அன்று வராததால் அசுரன் கவலைப்பட்டான். இரண்டு நாட்கள் பொறுத்திருந்து பின் தன் மகனை அழைத்து "பறவையைக் காணாது மனம் அஞ்சுகிறது.

எனக்கு சந்தேகம் வருகிறது. அதன் வீட்டில் தங்கியுள்ள அந்தணன் ஒழுக்கம் கெட்டவன். இரக்கம் இல்லாதவன். நீ விரைந்து சென்று ராஜதர்மா உயிருடன் உள்ளதா? என பார்த்து வா" என்றான்.

மகனும்உடன்பறவை வசித்த ஆலமரத்தை நோக்கிச் சென்றான். அங்கே ராஜதர்மா கொல்லப்பட்டு அதன் எலும்புகள் மரத்தடியில் இருப்பதைக் கண்டான்.

(தொடரும்)

நல்லசேவை செய்வதற்குரிய ஆற்றலை கெட்ட மனிதனிடம் ஒருநாளும் காணமுடியாது.
– ஹொரேஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வர்த்தக சந்தையில் ஆசிரியத் தொழில்

இன்று ஒக்ரோபர் 5 சர்வதேச ஆசிரியர் தினம். ஆசிரியர்களுக்கு மதிப்பளிப்பதற்கான உலக நாள்.

அன்னைக்கும் தந்தைக்கும் தினம் ஒதுக்கி வருடத்தில் ஒரு நாளேனும் தாயை, தந்தையை நினைத்துக் கொள் என்று கூறு கின்ற அளவில் நிலைமை வந்த பின்பு, சர்வ தேச ஆசிரியர் தினத்தை அறிவிக்காமல் இருக்க முடியுமா என்ன?

ஆம், இன்று எதற்கெடுத்தாலும் நாள் ஒதுக்கி அதனை விழாவாக்க வேண்டிய அளவுக்கு உலக நிலைமை வந்துவிட்டது.

உண்மையில் ஆசிரியர்களுக்கான மதிப்பும் மரியாதையும் என்பது நாள் நிர்ணயித்து செய்யப்படுவதன்று.

மாறாக, ஆசிரியர்கள் எந்நாளும் போற்றப்பட வேண்டியவர்கள். இதயத்தில் வைத்து பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

அதனால்தான் மகா அலெக்ஸாண்டர் கூறினார்; இந்த உலகத்துக்கு என்னைத் தந்தவர்கள் என் பெற்றோர். ஆனால் இந்த உலகத்தை எனக்குக் காட்டித் தந்தவர்கள் என் ஆசிரியர்கள் என்றார்.

உண்மை, மாசற்ற ஆசிரியர்களால்தான் இத்தேசத்துக்கான தலைவர்களும் தேச பிதாக்களும் உருவாக்கப்படுகின்றனர்.

ஆனால் இன்றைய சமகால சூழ்நிலை யில் ஆசிரியத்துவம் வர்த்தக சந்தைக்கு வந்துவிட்டது.

ஆம், சேவை வழங்குகின்ற சந்தை அமைப்பில் முதன்மை பெறுகின்ற தொழிலாக ஆசிரியத்துவம் வந்த பின்பு, ஆசிரியர் தினத்தில் கூட உரிய மதிப்பு மரியாதையை ஆசிரியர் களால் பெறமுடியவில்லை என்பதுதான் உண்மை.

இதை நாம் கூறும்போது நம் இதயமும் கனக்கவே செய்கிறது.

ஆனால் யதார்த்தத்தை கடந்து கற்பனா வாதத்தில் நின்று கொண்டு ஆசிரியர்கள் மீது மாணவர்கள் மிகுந்த பக்தியும் மரியாதையும் கொண்டுள்ளனர் எனக் கூறுவது நியாய மாகாது.

ஆம், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில ஆசிரியர்கள் மாணவர்களின் மனங்களை – இதயங்களை ஆட்கொண்டிருந்தாலும் தனியார் கல்வி முறைமை நடைமுறைக்கு வந்த பின்பு கல்வி வியாபாரப் பண்டமாயிற்று. பணம் இல்லாமல் கல்வி கற்க முடியாததாயிற்று.

பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற அதே ஆசிரியர் தனியார் கல்வி நிலையத்தில் தனது முழு வினைத்திறனையும் முழு ஆற்ற லையும் வெளிப்படுத்துகின்றார்.

ஆனால் பாடசாலையில் அவர் மாணவர்களை வஞ்சிப்பதிலும் கற்பித்தல் நேரத்தை வீணடிப்பதிலுமே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார் என்பதை மாணவர்கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டு ஆசிரியர்களை எடை போடுகின்றனர்.

மேற்போந்த ஆசிரியர்களின் செயலால், அர்ப்பணிப்போடு செயற்படுகின்ற ஆசிரியர்களின் புனிதமான சேவையும் களங்கப்பட்டுப் போவதுதான் வேதனை.

எதுவாயினும் ஆசிரியத் தொழில் என்று வர்த்தக சந்தையில் விளம்பரத்துடன் கூடிய விற்பனைப் பொருளாக வந்ததோ! அதன் தாக்கம் புனிதமான மருத்துவத்திலும் சமயச் சடங்குகளிலும் இதர பணிகளிலும் பக்க வேர் கொண்டு பரவத் தொடங்கிற்று.

இந்த நிலையில் ஆசிரியர் மாணவர் உறவு என்பது போலித்தனமும் நடிப்புத் தனமும் நிறைந்ததாக இருக்கிறது என்ற உண்மையை இன்றைய நாளில் வேதனையோடு பதிவிட வேண்டியதாயிற்று.

## சுகாதார வழிகாட்டலை மீறி வழிபாடு வவுனியா தோணிக்கல் சிவன் கோவில் தனிமைப்படுத்தப்பட்டது

(வவுனியா)

வவுனியா, தோணிக்கல் சிவன் கோவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில்கோவிட் பரவல் இன்னும் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் வராத நிலையில், வவுனியா, தோணிக்கல் சிவன் கோவிலில் கோவிட் தொடர்பான சுகாதார வழிகாட்டல் சுற்றறிக்கையை மீறி 50 இற்கும் மேற்பட்டோர் வழிபாடுகளில் ஈடுபட்டதாக சுகாதாரப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டையடுத்து விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சுகாதார அறிவுறுத்தல்களை மீறி குறித்த ஆலயத்தில் வழிபாடுகள் இடம்பெற்றதையடுத்து குறித்த ஆலயம் தனிமைப்படுத்தப்பட்டதுடன், ஆலயத்தில் நின்ற 25 பேரினது விபரங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ம-3,250)

### மருத்துவக் குறிப்பு

யூக்கலிப்டஸ் இலைகளை நீரில் போட்டு கொதிக்க வைத்து குளித்தால் உடல் வலி நீங்கும். ரோஜாப்பூ இதழ்களை சாப்பிட சுறுசுறுப்பாக இருக்கலாம்.

## எதிர்வரும் 7,8 ஆம் திகதிகளில் சகல பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தடுப்பூசி

(கொழும்பு)

சகல பல்கலைக்கழக மாணவர்களுக்கும் எதிர்வரும் 07 மற்றும் 08 ஆம் திகதிகளில் கொரோனாத் தடுப்பூசி வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கமைய, மாணவர்கள் தாம் வசிக்கும் பிரதேசத்துக்கு அருகிலிருக்கும் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திகொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் பல்கலைக்கழகங்களை மீண்டும் திறப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.(ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று 05 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** வல்லான், ஆலடி சந்தி, இறுப்பிட்டி, கேரதீவு, குறிகாட்டுவான், மடத்து வெளி, நடுவுக்குறிச்சி, புங்குடுதீவு ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பாரதிபுரம், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், தாண்டிக்குளம் நீர்வழங்கல், பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரியடி, பூந்தோட்டம் தொழிற்பேட்டை, பூந்தோட்டம், காத்தார் சின்னக்குளம், மகாறம்பைக்குளம், மகாறம்பைக்குளம் (தாஸ்நகர்), புதிய பேருந்து நிலையம், பெரியார் குளம், சோயாவீதி, தாண்டிக்குளம், குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், புதுக்குளம், ஆண்டியப்புளியங்குளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** ஹ்ஸைனெஸ் நகர், கரடிக்குழி, காயக்குழி திட்டம், கொண்டச்சி திட்டம், கொண்டச்சி சிங்கள கிராமம், கூழாங்குளம் திட்டம் (ஜீநாத் நகர்), மறிச்சுக்கட்டி, முள்ளிக்குளம், பாலைக்குழி, பாலைக்குழி திட்டம் ஆகிய பிரதேசங்களிலும்

நாளை 06 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி யிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** சுருவிலிலும் (ஊர்காவற்றுறை)

**கிளிநொச்சி பிரதேசத்தில்** எஸ்.ஆர். அரிசி ஆலையடி, ஸ்கந்தபுரம், கண்ணகிபுரம், முகாமைத்துவப் பயிற்சி மையம் கனகபுரம், உருத்திரபுரம் பலநோக்குக் கூட்டுறவுச் சபை அரிசி ஆலை, அம்பாள்குளம், ஜெயந்திநகர், கனகபுரம், அப்பன் மோட்டார்ஸ் நிலையத்தடி (கனகபுரம்), கோப் சிற்றியடி (கனகபுரம்), சிவநகர், ஆனந்தநகர், உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, உருத்திரபுரம் கிழக்கு இந்துக் கல்லூரி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** அறுகம்புல்வெளி, கூமாங்குளம், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், நாகரிலுப்பைக்குளம், நொச்சிக்குளம், அவுதசப்பிட்டிய, பொன்னாவரசங்குளம், தாண்டிக்குளம், குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், புதுக்குளம், ஆண்டியபுளியங்குளம், ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** தப்ரோபேன், உறைந்த உணவு (இறால் பண்ணை), எருக்கலம்பிட்டி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### உடல் உழைத்து தேயட்டும்

❖ சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு "எதிர்ப்பது" என்றே பொருள்.

❖ ஒரு நல்ல லட்சியத்தை ஏற்றுக்கொண்டு, அதை அடைவதற்காக தைரியத்துடன் போராடும் வெற்றி வீரனாகத் திகழுங்கள்.

❖ நாம் எல்லோரும் கடவுளின் பிள்ளைகள். எதையும் சாதிக்கக் கூடிய வலிமை நமக்குள் இருக்கிறது.

❖ நல்லவழியில் செல்வத்தைத் தேடுவதும், அதை பிறருக்கு உதவும் வகையில் செலவழிப்பதும் மட்டுமே கடவுளுக்குரிய வழிபாடு.

❖ உடல் உறுப்புகள் துருப்பிடித்துத் தேய்ந்து போவதை விட, உழைத்துத் தேய்வது மேலானது.

❖ உலகம் ஏளனம் செய்வதை பொருட்படுத்த வேண்டாம். லட்சியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருங்கள்.

❖ மற்றவை எல்லாம் மரணத்தோடு நம்மை விட்டு நீங்கிவிடும். ஆனால், நல்லொழுக்கம் மறுபிறவியிலும் நம்மைத் தொடர்ந்து வரும்.

❖ செயலின் பயனில் மட்டும் கருத்தைச் செலுத்தாமல் செய்யும் முறையிலும் கவனம் வைப்பது அவசியம்.

# மரண அறிவித்தல்



மண்ணில் 1962 - 05 - 30

விண்ணில் 2021 - 09 - 29

# கணபதிப்பிள்ளை சுகுணராஜா

யாழ்.அச்சுவேலி வளலாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் முல்லைத்தீவு விசுவமடுவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுகுணராஜா கடந்த 29.09.2021 (புதன்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - ஆசைப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கணபதிப்பிள்ளை (பிரபல வர்த்தகர் - பிள்ளையார் ஸ்ரோர்ஸ்) - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சிவசுப்பிரமணியம் (கனடா), யோகநாயகி (அச்சுவேலி), அருந்தவநாயகி (கனடா), நவரட்ணராஜா (பிரான்ஸ்), பாலசிங்கம் (பாலா - மொன்றியல்), ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா), ஆனந்தகௌரி (மொன்றியல்), சரவணபவானந்தன் (மொன்றியல்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் வதனேஸ்வரி (கனடா), சண்முகராசா (அச்சுவேலி), ஸ்ரீகாந்தா (கனடா), ரேணுகா (பிரான்ஸ்), ஜெயந்தி (மொன்றியல்), சத்தியலக்சுமி (கனடா), சுகிர்தரன் (மொன்றியல்), பிரமிக்கா (மொன்றியல்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சபேசன் (மொன்றியல்), சதீசன் (சண் கிறேசர் உரிமையாளர், அச்சவேலி), நிலானி கர்ஷன் (லண்டன்), பிறமியா (மொன்றியல்), மாதுளன் (கனடா), மாதுஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும் றிஸ்யன் (பிரான்ஸ்), Bragan (பிரான்ஸ்), துவாரகா (மொன்றியல்), கர்ஷன் (மொன்றியல்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.10.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார நடைமுறைகளுக்கமைவாக நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - திருமதி ஸ்ரீகாந்தா

தொடர்புகளுக்கு:-

| | | | |
|---|---|---|---|
| சிவம் | (சகோதரன்) | Mobile :- | +14164386802 |
| அருந்தா | (சகோதரி) | Mobile :- | +14163356558 |
| சபேசன் | (மருமகன்) | Mobile :- | +15145676261 |
| சதீசன் | (மருமகன்) | Mobile :- | +94778296691 |
| நவம் | (சகோதரன்) | Mobile :- | +33651066617 |
| ஸ்ரீ | (சகோதரன்) | Mobile :- | +14379896522 |
| பாலா | (சகோதரன்) | Mobile :- | +15146688711 |
| கௌரி | (சகோதரி) | Mobile :- | +15146268805 |
| பவான் | (சகோதரன்) | Mobile :- | +15142971282 |

வளலாய், அச்சுவேலி

(8129)

# 43 பேர்...

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13,102 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

# துன்னாலையில்...

என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த வியாழக்கிழமை இரவு துன்னாலை கலிகைச் சந்திக்கு அருகாமையில் முன்னே சென்ற டிப்பர் வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிள் டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயமடைந்த மூவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

அதில் ஆபத்தான கட்டத்தில் இருந்த இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,60)

# அதிகாரப் பகிர்வு...

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை நேற்றிரவு சந்தித்தார்.

இந்திய - இலங்கை உடன்படிக்கையின் கீழான 13ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்தவும் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலை அடையவும் இந்தியா தொடர்ச்சியான ஆதரவளிக்க வேண்டும் என்று அந்த நாட்டு வெளியுறவுத் துறை செயலாளர் ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லாவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியது.

மாகாண சபைத் தேர்தலை தாமதமின்றி நடத்தவும் இந்தியா, இலங்கைக்கு அழுத்தம் வழங்கவேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக் கொண்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ரெலோவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர். (ம-3)

# கொரோனாவால்...

வராவார்.

இவர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2014-2016 காலப் பகுதியில் சங்கீதத் துறையில் கல்வி பயின்றவராவார். (ம-3,60)

# 15 - 19 வயதின...

நிபுணர்களின் ஆலோசனைக்கு அமைய 15 முதல் 19 வயது வரையிலான வர்களுக்கு தடுப்பூசி ஏற்றுகை குறித்து ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்குவார் என அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

# பருத்தித்துறை...

கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி குஞ்சர்கடைச் சந்திக்கு அருகாமையில் நீதிபதியின் கார் சென்றுகொண்டிருந்தபோது முச்சக்கரவண்டியில் பயணித்த மூவர், நீதிபதியை அவமதிக்கும் வகையில் கைகளைக் காண்பித்து வார்த்தைப் பிரயோகம் செய்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் இருந்த வீதித் தடையில் இருந்த பொலிஸார் மூவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் நெல்லியடி, வவுனியா, இணுவில் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,33,60)

# பயங்கரவாத...

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளை, மிரிஹான பகுதியில் அமைந்துள்ள தனது இல்லத்தில் நேற்று முற்பகல் சந்தித்து உரையாற்றும்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பில் விசேடஅவதானம் செலுத்திய ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள், காலத்தை முன்னிலைப்படுத்திய தீர்வொன்றின் தேவை தொடர்பில் வலியுறுத்தினர்.

இந்த விஜயத்தின்போது தாம் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றம் ஆகியவற்றுக்கு அறிக்கையொன்றைத் தயாரித்து வழங்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தேவையான குழுக்களை நியமித்து, அவற்றின் அறிக்கைகளுக்கமைய, நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் காணப்படும் திருத்தப்படவேண்டிய உறுப்புரைகளைத் திருத்த உடன் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

இருப்பினும், நாட்டில் நிலவிய நீண்ட கால யுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பலவற்றுக்குத் தீர்வு பெறுக் கொடுக்கவும் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியைப்போன்றே, ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பிலும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

விசேடமாக, காணாமற்போனோரது குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கவும் காணாமற்போனோருக்கு நட்டஈடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

நாட்டின் உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும், தமிழ் அரசியல் கட்சிகள், புலம்பெயர்ந்த தமிழர்கள் மற்றும் சர்வதேச நாடுகளின் அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து பணியாற்றுவதன் தேவை தொடர்பில், ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தொடரில் உரையாற்றும்போது தான் தெளிவுபடுத்தியதாகவும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

சிவில் அமைப்புகளுடன் பரஸ்பர புரிதலுடன் பணியாற்றுவதோடு, நாட்டின் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றுக்கு அவற்றின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதாகவும் ஜனாதிபதி எடுத்துரைத்தார். (ம-3)

# தமிழ்த் தரப்புக்...

படையிலான தீர்வு வேண்டும் என்ற ஒரு விடயத்திலாவது தமிழ்த் தரப்புக்கள் ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும்.

இந்த விடயத்தில் தமிழ்த் தரப்புக்களின் கோரிக்கை அழுத்தமாக இல்லையென்பதே இந்தியாவின் நிலைப்பாடு" இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களிடம் நேரில் தெரிவித்துள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களிற்கும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லாவிற்கு மிடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இதன்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"13வது திருத்தத்தின் அடிப்படையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்பதே இந்தியாவின் நிலைப்பாடு. அதில் எந்த மாற்றமும் இல்லை. மாகாண சபை முறைமையை செயலிழக்கச் செய்யும் இரகசிய நிகழ்ச்சி நிரலில் அரசு செயற்பட முனைவதும் இந்தியாவிற்கு தெரியும். அதனாலேயே மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைத்துக் கொண்டிருக்கிறது.

மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென இந்தியா தொடர்ந்து இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

இதற்கு இந்தியா மட்டும் அழுத்தம் கொடுப்பது போதாது. தமிழ்த் தரப்புக்களின் குரலும் வலுவாக ஒலிக்க வேண்டும். 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமையை அமுல்படுத்த வேண்டுமென தமிழ்த் தரப்புக்கள் வலுவாக, ஒரே குரலில் கூற வேண்டும். இப்போது தமிழ்த் தரப்புக்களில் இருந்து வரும் குரலின் அழுத்தம் போதாதென இந்தியா கருதுகிறது.

தமிழ்த் தரப்புக்களிடம் எத்தனை அணிகள் இருந்தாலும், குறைந்தபட்சம் இந்த விடயத்திலாவது, ஒரே குரலில் பேச வேண்டுமென இந்தியா கருதுகிறது.

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தும்படி இலங்கை மீது நாம் அழுத்தம் கொடுக்கும் சந்தர்ப்பங்களில், 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வை தமிழ்த் தரப்புக்கள் அதிகம் வலியுறுத்துவதில்லையென்றும், தேர்தல் சட்டத் திருத்தத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையாக உள்ளதாகவும் அரச தரப்பில் கூறப்பட்டு வருகிறது" எனத் தெரிவித்தார். (ம-3)

# அரசுக்கு...

கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தற்போது விடியும்போது நாட்டில் எங்கோ ஓரிடத்தில் உள்ள தேசிய வளத்தை அரசால் இரகசியமாக விற்பனை செய்த செய்திகளையே கேட்கக் கூடியதாக இருக்கின்றது.

அரசு மக்களை மரணத்தை நோக்கிக் கொண்டு சென்று, நாடு முழுவதையும் தாரைவார்க்கும் வேலைத்திட்டத்தை முற்றாகச் செயற்படுத்தி வருகின்றது என்றார். (ம-3)































**UK-STUDENT VISA**

A/L எடுத்த மாணவர்கள் மற்றும் DIPLOMA/DEGREE முடித்த மாணவர்கள் குறைந்த செலவில் இங்கிலாந்தில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் வீசா ஏற்பாடுகள். (C-2754)

ENGLISH MEDIUM

IELTS இலவசமாக கற்பிக்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

0777-068-777



**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

0768226240 DHL


## பட்டதாரி பயிலுனர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

### இராஜாங்க அமைச்சர் சுசில்

(கொழும்பு)

பயிலுனர் பட்டதாரிகள் 53 ஆயிரம் பேருக்கு மூன்று மாதங்களில் நிரந்தர நியமனம் வழங்க அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

அத்துடன் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவித்தால் ஆசிரியர் சேவையை மூடிய சேவையாக அமைக்கமுடியும் என கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு, பயிலுனர் பட்டதாரிகளுக்கான நிரந்தர நியமனம் தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹினி குமாரியினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ம-03)

## ரிஷாத்தை விடுவியுங்கள் சபையில் ரணில் வலியுறுத்து

(கொழும்பு)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக சாட்சியங்கள் இல்லாவிட்டால் அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக சாட்சியங்கள் இருந்தால் அவற்றை முன்வைத்து, வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைத் தடுத்து வைத்திருப்பதென்றால், அவருக்கு எதிராக குற்றச்சாட்டு இருக்க வேண்டும். இது ரிஷாத் பதியுதீன் பிரச்சினை மாத்திரமன்றி பாராளுமன்றத்தின் பிரச்சினையாகும் என்றார். (ம-03)


**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்)

பரப்பு 6 இலட்சம்

பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

[தரகர் தேவையில்லை.]

077 814 7389 | 077 614 7333



**அமெரிக்கா செல்ல**

பாஸ்போர்ட் எடுத்து விட்டீர்களா?

விளையாட்டு அல்ல இது உண்மை

அமெரிக்க அதிஸ்ட விசா

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள் (C-2755)

இலவச வாய்ப்பை தவறவிடுவானேன்?

எல்லோருக்கும் வெளிநாடு செல்ல வசதி இருக்காது ஆனால் 18 வயதிற்கு மேற்பட்ட யாரும் இந்த இலவச வாய்ப்பை பயன்படுத்தலாம்.

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்

பாஸ்போட் இல்லாமல் விண்ணப்பிக்க முடியாது

பதிவுகள் ஆரம்பம்-07-10-2021

உடனடியாக கொழும்பு சென்று One Day Pass Port எடுங்கள்

V2 Travels 0768226244

0768226237 / 0768226240



**வேலையாட்கள் தேவை**

கிளிநொச்சியில் குரு ஹாட்வெயார் நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

ஆண்கள் மட்டும்

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் இருந்து 10 km சுற்றாடலில் வசிப்பவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

01. கணக்குப் பதிவாளர்
02. கணக்கு உதவியாளர்
03. ஹாட்வெயார் பணியாளர்
04. மாபிள்கடை பணியாளர்
05. விற்பனைப் பிரதிநிதி

தகுதியுடையோர் சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும். சம்பளம் கவர்ச்சிகரமாக வழங்கப்படும்.

கிழமை நாட்களில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை, நேரில் சமுகமளிக்கவும். (C-2752)

தொ. இல : 077 743 5265



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் - காரைநகர் வீதியில் ஓட்டுமடம் சந்தியில் இருந்து 500m தூரத்தில் 20 அடிப் பாதையுடன் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

இரண்டு பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

(யாழ். மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து 2Km தூரம்)

076 221 2037, 077 288 0152, 076 734 1023


## மரண அறிவித்தல்



தோற்றம் 15 08 1937

மறைவு 04 10 2021

### திருமதி புவனேஸ்வரி இராசையா

யாழ்ப்பாணம் கந்தர்மடம் அரசடியினைப் பிறப்பிடமாகவும் சிலகாலம் பிரான்ஸில் வசித்து தற்போது இல. 374, கச்சேரி நல்லூர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி இராசையா நேற்று (04.10.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரு - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பராசக்தி மற்றும் ராஜேஸ்வரி, காலஞ்சென்ற சிவரட்ணம் மற்றும் சிவராஜா, இராஜரட்ணம், குணரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் யோகராஜா (அப்பி - பிரான்ஸ்), சுசீலா, காலஞ்சென்ற தவராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலா, ரதி, காலஞ்சென்ற கனகசபை ஆகியோரின் அன்பு மாமியாரும் காயத்திரி, கஜேந்தினி, கஸ்தூரி, தீபிகா, நிஷாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆதன்யா, ஆத்மிகன், மேன்னா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.10.2021) செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று காலை 9.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (8132)

இல. 374, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

077 112 7614

தகவல்:- குடும்பத்தினர்


**TECHNO WORLD**

தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை

**A/L 2023 இலவச Zoom Class**

புதிய பிரிவு ஆரம்பம் 06.10.2021 காலை 8.30

முற்றுமுழுதாக தேசிய பாடசாலை A/L தொழில்நுட்ப பிரிவு ஆசிரியர்களையும் மற்றும் Technical Collage விரிவுரையாளர்களையும் கொண்ட முன்னணி கல்வி நிறுவனம்

| | | |
|---|---|---|
| தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - | ராகவன் (B.sc)<br>முருகநிரோயன் (B.sc)<br>நிரோஜன் (B.sc) |
| பொறியியல் தொழில்நுட்பம் | - | அருண்குமார் [B. Tech Hons (Eng.)]<br>சிவஜன் (Lecturer)<br>நிசாந்தன் (HNDE) |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | - | திருக்குமரன் (B.sc in Agri.)<br>நிரோஜன் (B.sc in Agri.)<br>சிவகுமார் (B.sc in Agri.) |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | - | உமாகாந்தன் (BIT)<br>நஜன் (B.sc) |
| விவசாய விஞ்ஞானம் | - | சாரங்கன் (B.sc in Agri.)<br>திருக்குமரன் (B.sc in Agri.)<br>நிரோஜன் (B.sc) |
| புவியியல் | - | தினேஷ் (B.A) |
| ஊடகக்கற்கை | - | N.கஜிதரன் (B.A) |
| கணிதம் | - | மோகன்ராஜ் (B.sc) |
| சித்திரம் | - | ஜெயந்தன் (B.A) |

2022, 2021, Day Class மாணவர்களும் புதிதாக இணைய விரும்பும் மாணவர்களும் இணைந்துகொள்ளலாம்.

காலை 10.00 மணிமுதல் 2.00 மணிவரை அனுமதிகளை நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். (C-2757)

077 017 5346


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.